## கற்றல் விளைவு / திறன் வழி மதிப்பீட்டுத் தேர்வு

**வகுப்பு : ஆறு**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

EMIS ___________________ **மதிப்பெண்கள்: 25**

**மொழி : தமிழ் வழி** **நேரம் :40 நிமிடங்கள்**

**கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி:**

1. **கீழ்க்காணும் இலக்கண விதிக்கு உட்பட்டு வரும் இலக்கணச் சொல்லைத் தேர்ந்தெடு?**

"தனக்கு முன் ஒரு குறில் எழுத்தையும் தனக்குப்பின் ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் பெற்றுச் சொல்லின் இடையில் மட்டுமே வரும் "

அ ஆய்தம் ஆ குற்றியலுகரம்
இ உயிரளபெடை ஈ குற்றியலிகரம்

2. **கீழ்க்காணும் கூற்றையும் காரணத்தையும் ஆராய்ந்து சரியான தெரிவைத் தேர்ந்தெடு.**

**கூற்று**: உயிர்மெய் எழுத்து சார்பெழுத்துகளுள் ஒன்று.

**காரணம்:** மெய் எழுத்துகளும் உயிர் எழுத்துகளும் ஒன்றுடன் ஒன்று சேர்வதால் உயிர்மெய் எழுத்துக்கள் தோன்றுகின்றன.

அ. கூற்று மட்டும் சரி. ஆ. கூற்று மட்டும் தவறு.
இ. கூற்றும் காரணமும் சரி. ஈ. கூற்றும் காரணமும் தவறு.

3. **அறம் செய விரும்பு இத்தொடரில் காணப்படும் சார்பெழுத்துகளின் எண்ணிக்கை?**

அ. ஆறு ஆ. ஐந்து இ. எட்டு ஈ. ஏழு

4. **பழங்காலத்தில் ஒரு செய்யுளை இயற்றுவதற்கு முன் இறைவனை வாழ்த்தி நூல்களை இயற்றினர். அவ்வகையில், இயற்கையை வாழ்த்தி எழுதப்பட்ட காப்பிய நூல் எது?**

அ. கம்பராமாயணம் ஆ. சிலப்பதிகாரம்
இ. மணிமேகலை ஈ. பெரியபுராணம்

5. **பறவைகள், உணவு, இருப்பிடம், தட்பவெப்பநிலை மாற்றம், இனப்பெருக்கம் போன்ற காரணங்களால் ஓர் இடத்தை விட்டு இடம் பெயர்கின்றன.**

**கீழ்க்கண்ட எந்தக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு பறவைகள் இடம் பெயர்வதில்லை?**

அ. நிலவு ஆ. விண்மீன்
இ. புவியிர்ப்புப் புலம் ஈ. மழைப் பொழிவு

# English

## WOODCUTTER AND THE TIGER

A woodcutter saw a tiger trapped in a cage. The tiger pleaded with the woodcutter to release him. The woodcutter pitied the tiger and let him out. Now looking at the woodcutter the tiger said that he was hungry and wanted to eat him. The woodcutter shouted at the tiger to stop his attack, instead wanted to ask someone for justice as it was not fair to eat the person who helped him.

A rabbit passed that way hopping to his joy. The woodcutter stopped him and narrated the whole incident. The rabbit feared that the tiger would eat him if he supported the woodcutter and said the tiger was right. The tiger was ready to eat the woodcutter, but the woodcutter wanted to ask the deer who passed by. The deer too thought the same as the rabbit and said, the tiger was right.
As the tiger was ready to eat the woodcutter, there came a jackal. The woodcutter asked him for justice and repeated the incident. The jackal said that he couldn't understand the incident. The impatient tiger went into the cage and closed the door and bolted the cage to explain the situation. Now the woodcutter without realising the situation complained to the jackal. The jackal said how can the poor tiger eat you when he is in the cage. The woodcutter realised the situation and decided never to release him again. The woodcutter learnt to help the person who is really worthy of it.

**Questions.**

**1. Why did the woodcutter release the tiger?**

a. Because he felt pity. b. Because he was hungry.
**c.** Because the tiger pleaded. **d.** Because he was in the cage

**2. Why did the rabbit and the deer lie?**

a. They wanted to save their lives.
b. They wanted to support the animals.
c. The woodcutter did not support the animals.
d. They helped the tiger to avenge the woodcutter.

**3. What was the smart word used by the jackal to make the tiger go back to the cage?**

a. Impatience. b. Bolted the door.
c. Can't understand d. Made the woodcutter realise

**4. What was the lesson learnt by the woodcutter through this incident?**

a. Never help an animal b. Help others regardless.
c. Help the person really in need. d. Help the person who is worthy.

**5. Why did the woodcutter narrate the incident to all and not the tiger?**

a. The tiger was Dumb. b. The woodcutter could talk.
c. The woodcutter wanted justice. d. The woodcutter was impatient.

## கணிதம்:

1. இன்று வரை நம் நாட்டில் பதிவான கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை 44,995,055 ஆகும்.
   குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 44,461,664 என்றால், இறந்தவர்களின் எண்ணிக்கையைக் கண்டறியவும்.
   a. 534391 b. 534611 c. 533391 d. 534491

2. "உலகளவில், 19 ஜூலை 2023 காலை 8:20 நிலவரப்படி, 768237788 COVID–19 நோயாளிகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன".
   பின்வருவனவற்றில் எது உலகளவில் கோவிட்–19 நோயாளிகளின் எண்ணிக்கையை பன்னாட்டு எண்முறையில் வார்த்தைகளில் குறிப்பிடுகிறது?
   a. ஏழாயிரத்து அறுநூற்று எண்பத்தி இரண்டு மில்லியன் முப்பத்தேழாயிரத்து எழுநூற்று எண்பத்தி எட்டு
   b. எழுநூற்று அறுபத்தெட்டு மில்லியன் இருநூற்று முப்பத்தேழாயிரத்து எழுநூற்று எண்பத்தெட்டு
   c. எழுபத்தாறு கோடியே எண்ணூற்று இருபத்து மூன்று இலட்சத்து எழுபத்தேழாயிரத்து எண்பத்தெட்டு
   d. எழுபத்தாறு கோடியே எண்பத்திரண்டு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து எழுநூற்று எண்பத்தெட்டு

3. காசோலைக்கான மாதிரி வடிவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. 60,87,050 தொகையை வட்டமிட்ட இடத்தில் வார்த்தைகளில் எழுத திருமதி அம்ருதா தனது மகனிடம் உதவி கேட்டார்.

<table>
<tr><td colspan="4" align="right">தேதி:</td></tr>
<tr><td colspan="4">PAY திரு. எம். கணேஷ்</td></tr>
<tr><td colspan="4">_______________________________________________ அல்லது தாங்குபவர்</td></tr>
<tr><td colspan="2">ரூபாய் ( )</td><td rowspan="2">₹</td><td rowspan="2">60,87,050</td></tr>
<tr><td>ஏ/சி<br>எண்.</td><td></td></tr>
<tr><td colspan="3">ஏபிசி பேங்க் ஆஃப் இந்தியா<br>IFSC குறியீடு: SBIN00018121<br>XYZ நகர்,<br>சென்னை – 600089</td><td>திருமதி அம்ருதாவுக்கு</td></tr>
</table>

**வட்டமிட்ட இடத்தில் அம்ருதாவின் மகன் பின்வரும் எந்த எண் பெயரை எழுதுவார்?**

a. ஆறு இலட்சத்து எட்டாயிரத்து எழுநூற்று ஐம்பது
b. ஆறு இலட்சத்து எண்பத்து ஏழாயிரத்து ஐம்பது
c. அறுபது இலட்சத்து எட்டாயிரத்து எழுநூற்று ஐம்பது
d. அறுபது இலட்சத்து எண்பத்து ஏழாயிரத்து ஐம்பது

4. **WHO இன் படி, ஜூலை 2023 இரண்டாவது வாரம் வரை பதிவான மொத்த COVID–19 நோயாளிகளின் எண்ணிக்கை 76,80,00,426 ஆகும் . ஜூலை 2023 மூன்றாவது வாரத்தில் புதிதாகப் பதிவான நோயாளிகள் 2,37,666 ஆகும் .**

ஜூலை 2023 மூன்றாவது வாரம் வரை பதிவான மொத்த நோயாளிகளின் எண்ணிக்கையைக் கண்டறியவும்.

a. 76,82,48,092 b. 76,82,48,002 c. 76,82,38,092 d. 76,82,38,002

5. **ஐந்து வெவ்வேறு நாடுகளில் உள்ள கைபேசி பயனர்களின் எண்ணிக்கையின் பின்வரும் தரவை பகுப்பாய்வு செய்யவும்:**

---


| **நாட்டின் பெயர்** | **கைபேசி பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| தான்சானியா | 56,313,438 |
| தென்னாப்பிரிக்கா | 59,474,500 |
| அர்ஜென்டினா | 56,725,200 |
| கொலம்பியா | 57,900,472 |
| உக்ரைன் | 57,505,555 |

பின்வருவனவற்றில் எது கைபேசி பயனர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து நாடுகளின் ஏறுவரிசையைக் குறிக்கிறது?

a. தான்சானியா, உக்ரைன், அர்ஜென்டினா, கொலம்பியா, தென்னாப்பிரிக்கா
b. தான்சானியா, அர்ஜென்டினா, உக்ரைன், கொலம்பியா, தென்னாப்பிரிக்கா
c. தென்னாப்பிரிக்கா, கொலம்பியா, உக்ரைன், அர்ஜென்டினா, தான்சானியா
d. தென்னாப்பிரிக்கா, உக்ரைன், கொலம்பியா, அர்ஜென்டினா, தான்சானியா

அறிவியல்

1. பின்வரும் நிகழ்வுகளை நிகழ்த்த எது தேவைப்படுகிறது?



a. நிறை b. ஈர்ப்பு c. எடை d. விசை

2. பொருள்கள் ஒரு நிலையான புள்ளியிலிருந்து ஒரே தொலைவில் இருக்கும் இயக்கத்திற்கு ________________ என்று பெயர்.

a. சுழற்சி இயக்கம் b. வட்ட இயக்கம்

c. ஒழுங்கற்ற இயக்கம் d. அலைவு இயக்கம்

3. பூமியை அதன் சுற்றுப்பாதையில் இருந்து விலகாமல் சூரியனைச் சுற்றி வர எந்த விசை துணைபுரிகிறது?

a. காந்த விசை b. உராய்வு விசை

c. ஈர்ப்பு விசை d. மின் விசை

4. பின்வருவனவற்றுள் எந்த விலங்கு எப்பொழுதும் நீர் அருந்தாமல் தான் உண்ணும் விதைகளிலிருந்து நீரைப் பெறுகிறது?

1  2  3  4 

5. கீழே கொடுக்கப்பட்டுள்ள என் உடல் தகவமைப்பை கொண்டு நான் யார் என்று கண்டுபிடியுங்கள்.

1. நான் செதில்களாலான தோல் அமைப்பைக் கொண்ட ஊர்வன வகையைச் சார்ந்தவன் .
2. நுரையீரல்கள் மூலம் மட்டும் சுவாசிப்பேன்.
3. சில நேரங்களில் தலை இணைப்பின் மூலமாக தலையை முழுமையாக என்னால் சுழற்ற முடியும்.
4. என் நாக்கில் காணப்படும் நீட்சிப் பகுதிகள் இரையை இழுத்துப் பிடிக்க பயன்படுகின்றன.

a) தவளை b) பல்லி c) மீன் d) நத்தை

## சமூக அறிவியல்

1. **ஒரு கால இயந்திரத்தில் ஏறி 30 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் இருந்த ஆப்பிரிக்கா காட்டிற்கு சென்று விட்டதாக கற்பனை செய்துகொள். இப்போது நீ கீழ்க்காணும் பண்டைய கால மனிதர்களில் யாரைக் காண்பாய்?**

    a. நியாண்டர்தால்      b. ஹோமோ எரக்டஸ்

    c. ஹோமோ ஹெபிலிஸ்      d. ஆஸ்ட்ரலோபிதிகஸ்

2. **பின்வருவனவற்றுள் வரலாற்றுக்கு முந்தைய காலத்து மனிதர்கள் விவசாயிகளாக மாறுவதற்கு உதவிய கூற்றுகள் எவை?**

அ) ஆற்றங்கரை நிலங்களில் விழுந்த விதைகள் எளிதாக முளைக்கும்.

ஆ) நீர் நிறைந்த பகுதிகளில் செடிகள் விரைவாக வளரும்.

இ) பயிர்களுக்கு ஊட்டச்சத்து வழங்குவதன் மூலம் பயிர் உற்பத்தியைப் பெருக்கலாம்.

ஈ) ஒற்றை விதையிலிருந்து முளைக்கும் செடி வளர்ந்து பல மடங்குகள் காய்களையும் கனிகளையும் வழங்கும்.

a. அ, ஆ, இ மற்றும் ஈ      b. அ, ஆ மற்றும் இ

c. அ, ஆ மற்றும் ஈ      d. அ மற்றும் ஈ

3. **கூற்று: திராவிடர்கள், நீக்ரிட்டோக்கள், ஆரியர்கள், ஆல்பைன்கள் மற்றும் மங்கோலியர்கள் போன்றோர் நவீன இந்திய இனத்தவரின் ஒரு பகுதியாக உள்ளனர்.**

**காரணம்: இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு வளங்களால் ஈர்க்கப்பட்டு உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து, பல்வேறு இனமக்கள் வந்தனர்.**

a. கூற்று சரி, காரணம் தவறு.      b. கூற்று தவறு, காரணம் தவறு

c. கூற்று தவறு , காரணம் சரி.      d. கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி.

4. **கீழ்க்கண்ட படத்தை உற்று கவனித்து கேட்கப்பட்ட வினாவிற்கு பொருத்தமான விடையைக் கண்டுபிடிக்கவும்.**



**சென்னையில் இருந்து புறப்பட்ட ஒரு விமானம் முதலில் இலண்டனில் தரையிறங்கி அதன் பின் அங்கிருந்து நியூயார்க்கை சென்றடைந்தது. எனில் அந்த விமானம் எந்தெந்த கண்டங்களில் நின்றது?**

a. ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் வட அமெரிக்கா
b. ஆசியா, ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா
c. ஆசியா, ஆஸ்திரேலியா மற்றும் தென் அமெரிக்கா
d. ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் அண்டார்டிகா

**5.கூற்று: சோட்டா நாகபுரி பீடபூமியில் சுரங்கத்தொழில் முக்கியமான தொழிலாக விளங்குகிறது.**

**காரணம்: சோட்டா நாகபுரி பீடபூமி தீப்பாறைகளால் ஆனது.**

a. கூற்று சரி, காரணம் தவறு.

b. கூற்று தவறு, காரணம் தவறு .

c. கூற்று தவறு ,காரணம் சரி

d. கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி.

____________________________________________ .

# கற்றல் விளைவு / திறன்வழி மதிப்பீட்டுத் தேர்வு (விடைக் குறிப்பு)

**வகுப்பு : 6** **மொழி : தமிழ் வழி**

**பாடம் : தமிழ்**

| வினா எண் | தெரிவு | விடை |
|---|---|---|
| 1. | அ. | ஆய்தம் |
| 2. | இ. | கூற்றும் காரணமும் சரி. |
| 3. | ஈ. | ஏழு |
| 4. | ஆ. | சிலப்பதிகாரம் |
| 5. | ஈ. | மழைப் பொழிவு |

**பாடம் : ஆங்கிலம்**

| வினா எண் | தெரிவு | விடை |
|---|---|---|
| 1. | a. | Because he felt pity |
| 2. | a. | They wanted to save their lives |
| 3. | c. | Can't understand |
| 4. | d. | Help the person who is worthy |
| 5. | c. | The woodcutter wanted justice. |

**பாடம் : கணிதம்**

| வினா எண் | தெரிவு | விடை |
|---|---|---|
| 1. | c. | 533391 |
| 2. | b. | எழுநூற்று அறுபத்தெட்டு மில்லியன் இருநூற்று முப்பத்தேழாயிரத்து எழுநூற்று எண்பத்தெட்டு |
| 3. | d. | அறுபது இலட்சத்து எண்பத்து ஏழாயிரத்து ஐம்பது |
| 4. | c. | 76,82,38,092 |
| 5. | c. | தான்சானியா, அர்ஜென்டினா, உக்ரைன், கொலம்பியா, தென்னாப்பிரிக்கா |

**பாடம் :அறிவியல்**

| வினா எண் | தெரிவு | விடை |
|---|---|---|
| 1. | d. | விசை |
| 2. | b. | வட்ட இயக்கம் |
| 3. | c. | ஈர்ப்பு விசை |
| 4. | 4. |  |
| 5. | b. | பல்லி |

**பாடம் : சமூக அறிவியல்**

| வினா எண் | தெரிவு | விடை |
|---|---|---|
| 1. | d. | ஆஸ்ட்ரலோபிதிகஸ் |
| 2. | a. | அ, ஆ, இ மற்றும் ஈ |
| 3. | d. | கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி. |
| 4. | b. | ஆசியா, ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா |
| 5. | a | கூற்று சரி, காரணம் தவறு. |